# புதிய களத்தில் ...

*(15ம் பக்கத் தொடர்ச்சி)*

விடுதலைப் புலிகளின் ஆறு வருடகால நெகிழ்வும், நிதானமும், வெளியக சுயநிர்ணயம் குறித்து சிந்திக்க வேண்டிய நிலைக்கு சர்வதேசத்தை இன்று இட்டுச் சென்றுள்ளது.

இதனையே உள்ளகம், வெளியகம் என்கிற இரு அம்சங்களை சர்வதேச கட்ட நியமங்களிற்கு இசைவாக நுட்பமாகக் கையாண்டார் தேசியத் தலைவரென பாலா அண்ணன் 'போரும் சமாதானமும்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

2002 மாவீரர் தின உரையில் தேசியத் தலைவர் கூறிய விடயமொன்று இன்றைய காலகட்டத்தில் நினைவில் கொள்ள வேண்டிய முக்கிய கருத்தாக அமைகிறது.

## எந்த விதமான மேலாதிக்கத்திற்கும் அடிபணிந்து, ஒரு தீர்வினை, புலிகள் ஏற்று, சரணாகதி அடையவில்லை

உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில், எமது தாயக நிலத்தில், எமது மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால், நாம் அத்திட்டத் ததை சாதகமாக பரிசீலனை செய்வோமென அழுத் தமாகக் கூறியதோடு, ஆனால் அதேவேளை, எமது மக்க ளுக்கு உரித்தான உள்ளக சுயநிர்ணயம் மறுக் கப்பட்டு, பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப் பட்டால் நாம் பிரிந்து சென்று தனியரசு அமைப் பதைத் தவிர வேறு வழியில்லை" என்று உறுதிபடக் கூறினார் தேசியத் தலைவர்.

அதே வேளை தற்கால அரசியல் அறிவுலகில் சரவதேச சட்டங்களிலும் ஆழமான பார்வை இல்லாத காரணத்தால் எழுந்த தவறான ஆய்வு விமர்சனங்கள், உள்ளக நிர்ணயம் பற்றிய புலிகளின் கருத்தாய்வு நிலைப்பாட்டை திரிபுபடுத்தின.

ஏதோ, சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டைக் கைவிட்டு சமஷ்டிக்குள் சறுக்கி விழுந்துவிட்டதாக தப்பான வியாக்கியானங்கள் நிறைந்த பரப்புரை சமரொன்றை அக்காலத்தில் உருவாக்கியிருந்தது.

அவ்வகையான உள்ளகம் பற்றிய தீர்வு குறித்து ஆராய்வதற்கோ, பேச்சுவார்த்தையில் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டதாக பாலசிங்கம் அவர்கள் மிகத் தெளிவாகத் தனது நூலில் விளக்கமளிக்கிறார்

ஆகவே எந்த விதமான மேலாதிக்கத்திற்கும் அடிபணிந்து, ஒரு தீர்வினை, புலிகள் ஏற்று, சரணாகதி அடையவில்லையென்பதையே சமகால அரசியல் தெளிவாக்குகின்றது.

இந்த போராட்ட வரலாற்றினை, மீள் நினைவுகொள்ளும் இவ்வேளையில், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை வழியனுப்பி வைத்த விடுதலைப் புலிகளின் அரசியற்துறைச் செயலாளர் பா. நடேசன் அவர்கள், விடுத்த அறிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படுகின்றது.

சர்வதேச, பிராந்திய சூழலிற்கு ஏற்றவாறு இராசதந்திர வியூகத்தை மாற்றியமைத்த விடுதலைப் புலிகள், வெளியக சுயநிர்ணயக் கோட்பாட்டிற்கு நகரப் போவதன் முதற்படி நிலையாக இவ்வுரையைக் குறிப்பிடலாம்.

அரசானது, ஒப்பந்தத்தை 100 வீதம் சரியாகக் கடைப்பிடித்தால் மறுபடியும் நோர்வே தலைமையில் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாரென நடேசன் கூறியதை சிந்தனையின் உச்சத்திலிருக்கும் மகிந்தருக்கு வைக்கப்பட்ட பொறியாகக் கணிப்பிடலாம்.

அதேவேளை எதற்கும் உடன்படாமல் சிங்களம் இன அழிப்பினை தொடருமாயின், தடைகளை நீக்கி, தனியரசை அங்கீகரிப்பதே சர்வதேசத்தின் ஒரே தெரிவாக இருக்க வேண்டுமென வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது. ஆகவே தனியரசு நோக்கிய அடுத்த கட்ட நகர்வுகளை, புதிய இராசதந்திர வியூகங்களோடு, தமிழர் தலைமை மேற்கொள்ளுமென்பதை திடமாக நம்பலாம்.

அதில் புலம் பெயர் தமிழ் மக்களின் அறிவுப்பலமும், சகல வளங்களும் திரட்சியுற்று விடுதலையை விரைவாக்க வேண்டும். சர்வதேச சமூகத்தினை எமக்குச் சார்பாக மாற்றும் வரலாற்றுச் சக்தி, மக்கள் பலம் என்பதனை எரித்திரியா, கிழக்கு தீமோர் போன்ற விடுதலை பெற்ற நாட்டு மக்கள் எமக்கு உணர்த்தியுள்ளனர்.

# பழங்கள்ளு

## பண்டைய இலக்கியக் காட்சி

**வழுதி**
***(ஒரு பேப்பருக்காக)***

நமது இலக்கியங்களில் காணும் சில காட்சிகளை வாசகர்களுடன் பகிரும் பத்தி இது.

**போட்டாளே வேலையற்றுப் போய் .**

கி.பி. 15ஆம் நூற்றாண்டு காலம். வசைக்கவி காளமேகப் புலவர், பட்டப்படு பகலில் சுடு வெய்யிலில் கொலைப்பட்டினியோடு நடக்கிறார். பசி தாங்க முடியாமல் ஒரு அன்னச்சத்திரத்தை கண்டவுடன் உள்ளே நுழைகிறார்.

சாப்பாடோ வந்தபாடில்லை. மத்தியானச் சாப்பாட்டுக்கு அத்தமிக்கும் போதில் அரிசி வரும் அதாவது பொழுபட அரிசிவரும். பிறகு சோறாக்கி 'ஓர் அகப்பை ..... இலையிட வெள்ளி எழும்' அதாவது இலையில் சோற்றைப் போட வெள்ளி காலித்துவிடுமாம். மத்தியானச் சோறு சாப்பிடுகிற நேரம் விடிவெள்ளி எழும்புகிறது.

இப்படிக் கடும்பசியுடன் காளமேகப் புலவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். காளமேகப் புலவரின் இலைக்கு எதிராக இன்னொரு இலை வைத்து சோழநாட்டுப் பிராமணர் ஒருவரும் சாப்பிடுகிறார். சோழநாட்டுப் பிராமணர் குடும்பியை தலையின் பின் பக்கம் கட்டாது, நெற்றியில் கட்டுவார்கள்.

அந்தப் பிராமணரும் கடும் பசியுடன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். இந்த நேரம் பார்த்து பிராமணரின் குடுமி அவிழ்ந்து அவரது சோற்றில் விழுகிறது. சாப்பாட்டுக் கையுடன் குடுமியை எடுக்க ஏலாது. எனவே பிராமணர் தலையால் எத்தி குடுமியைப் பின்னுக்குக் கொண்டு வாறார்.

சோற்றில் தோய்ந்திருந்த முடி எத்துப்பட்டதில், பிராமணர் உண்ட சோற்றின் எச்சங்கள் காளமேகப் புலவரின் சோற்று இலையில் வந்து விழுகிறது.

கடும் பசியுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த காளமேகப் புலவருக்கு கடும் கோபம் வருகிறது. இனிச் சாப்பிட முடியாதே என்ற கோபம். வெண்பாவில் வசைக்கவி எழுதுகிறார்:

'சுருக்கவிழ்ந்த முன்குடும்பிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா – செருக்குற்ற
கோட்டானே நாயே குரங்கே உனை ஒருத்தி
போட்டாளே வேலை அற்றுப் போய்'


# Your Gateway to British Education

## Your Trusted British Education Consultants for Over 9 Years!

We welcome students from both Sri Lanka and India

Enrol **Now** for Jan/Feb/April 2008 In-take

**Knowledge Management Systems (Pvt) Ltd**

**KMS** has grown popular over the years, providing friendly and correct guidance to its clients. The key to the success is the trust and goodwill among the different societies, **KMS** serves.

Fully trained staff, provide the necessary guidance, realising your aspirations and needs. This is done in absolute privacy and care that lead to the necessary confidence.

This service is very useful.

Knowledge Management Systems has its officers in **London**, **Sri Lanka** and **India**.

Services provided include

- **Choosing a Course and Institution**
- **Application Process**
- **UK Visa procedures and guidance**
- **Life in the UK (living, accommodation, part-time work etc)**
- **Pre-departure assistance**
- **Assistance on arrival in the UK**




**SRI LANKA**
**Knowledge Management System (P)Ltd.,**
No. 32, Hampdan Lane,
Colombo-06,
Tel: **+94 (0)112 236 5530, +94 (0)112 553 106**
Fax: **+94 (0)112 365 529**
Email: ***colombo@britishstudylink.com***

**UK**
**Knowledge Management System (P)Ltd.,**
5 Station Chambers, Station Parade,
London – E61JD
Tel: **+44 (0)208 821 0107** Mob: **+44 (0)79 0503 8050**
Fax: **+44 (0)208 552 2949**
Email: london@britishstudylink.com

**INDIA**
**KMS Educational Consultants (P) Ltd.,**
Siena Circle, 14, Second Floor, 29/2, Durai Samy Road,
T.Nagar, Chennai 600017,
Tel: **+91 (0)44 6458 6061/62**
Mob: **+91 (0)99 416 770 65**
Email: chennai@britishstudylink.com